**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரைகளுடன் தேசர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன்

தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசோதித்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவு செய்யப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில் நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 1.5.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 பந்தி பிரகாரம் முதலீடொன்றை முதலிட்ட திகதி முதல் 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த காலமொன்றான குறுகிய கால முதிர்ச்சி காணப்படும் சந்தர்ப்பங்களில் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவையாக காட்ட வேண்டிய போதும், 03 மாதங்களில் முதிர்ச்சி அடையும் ரூபா 51,146,913 ஆன வைப்புக்களை முதலீட்டு செயற்பாடுகளின் கீழும், 06 மாதங்களில் முதிர்ச்சியடையும் ரூபா 41,011,616 ஆன வைப்புக்களை பணம் மற்றும் பணத்திற்கு சமமானவற்றின் கீழும் காட்டப்பட்டிருந்தன. இதன் காரணமாக ரூபா 78,196,312 ஆக வேண்டிய நிறுவனத்தின் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் ரூபா 68,061,016 ஆக ரூபா 10,135,296 குறைத்தும், முதலீட்டு செயற்பாடுகள் ரூபா 41,011,616 கூடுதலாகவும் காட்டப்பட்டன. | ஏற்பட்டுள்ள குறைபாட்டை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறோம். | நியமத்தின் ஆலோசனைகளிற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முழுமையாக தேய்விடப்பட்டிருந்த கிரயம் ரூபா 18,270,361 ஆன 03 வகைக்குரிய 753 சொத்து உருப்படிகள் பயன்படுத்தப்பட்ட போதும் அச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டுத் தவறை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீண்டும் திருத்தி நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இச் செயற்பாட்டை 2022 ஆண்டினுள் மதிப்பீட்டு திணைக்களம் மூலம் அல்லது வேறு குழுவொன்றின் மூலம் மேற்கொண்டு 2022 நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தி சரி செய்கிறேன். | சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலத்தை திருத்தி நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 பந்தி பிரகாரம் மீள்மதிப்பீட்டு பெறுமதி மீது நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களை ஒவ்வொறு 3 ஆண்டுகளிற்கு அல்லது 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், 2021 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 590,807,810 ஆன ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் 2014 ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் முன் விலைகள் எதிர்பாரா விதமாக அதிகரித்த காரணத்தால் தற்போதைய பெறுமானங்கள் பெரும்பாளும் முரண்பாடு ஏற்பட்டுள்ளதால், சொத்துக்களை மீண்டும் மீள்மதிப்பிட்டு, கணக்கு அறிக்கைகளில் உட்படுத்த நடடிக்கை எடுக்குகிறோம். | நியமம் பிரகாரம் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறையல்லா சொத்தொன்றான கழிவு நீர் வெளியேற்றும் தொகுதியை நிர்மாணித்தல் மற்றும் விடுதி குழாய்த் தொகுதியை புணரமைக்கும் ரூபா 4,706,344 பெறுமதி நிதிநிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்ககளின் கீழ் நடைமுறை வேலைகளாக காட்டப்பட்டிருந்தது. | அந் நடவடிக்கை முடிவடைந்தவுடன் நடைடுமுறையல்லாத சொத்தொன்றாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறை வேலைகள் நடைமுறை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யக் கூடாது. |
| (ஆ) | தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் விற்பனை போதாமையின் மீது 2020 சனவரி 01 திகதி முதல் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பதிவை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் செயலிழக்கச் செய்திருந்த போதும் ரூபா 4,506,771 ஆன பதிலீட்டு வரியொன்றை நடைமுறை சொத்தொன்றாக நிதிக்கூற்றுக்களில் 02 வருடங்களாக முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அது அறவிட முடியுமான | இதனை மீண்டும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாததால், நிறுவனத்தின் கணக்குகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | தொடர்பான பெறுமதியை அறவிட அல்லது புத்தகங்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதியொன்று அல்லாததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | 2022 ஆண்டில் 09 மாதங்களினுள் 37 சந்தர்ப்பங்களில் வங்கிக்கு செலவாகி இருந்த ரூபா 280,539 வைப்புக்களை இனங்கண்டு உரிய கணக்கிற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்காது நானாவித பயிற்சி வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தது. | பாடநெறிக் கட்டணத்தை மாணவர்களின் சான்றிதழ்களை விநியோகிக்கும் போது உறுதி செய்வதால், அச் சந்தர்ப்பத்தில் நேரடி வங்கி கொடுப்பனவுகளை இனங்காண்பதற்கும், குறுகிய கால செயலமர்வுகளை நடாத்துவதற்கான பணப் பெறுவனவுகளை பெற்றுக் கொள்வதன் மூலம் தீர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி நேரடி வைப்புக்களை அந்த அந்த மாத வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது இனங்கண்டு உரிய கணக்கிற்கு செம்மையாக்க வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் ரூபா 1,273,060 ஆன புடவைகள் மற்றும் கட்டில் விரிப்பு இருப்புக்கள் ரூபா 1,294,402 தொகையாக ரூபா 21,342 கூடுதலாகவும், ரூபா 761,649 ஆன சமையலறை உபகரண இருப்பு ரூபா 719,557 ஆக ரூபா 42,092 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | கணிப்பீட்டு அறிக்கையிற்கு உட்படுத்தியிருக்காத தெனியாய பயிற்சி மத்திய நிலையத்தில் பயன்படுத்த முடியாத கட்டில் விரிப்பு மற்றும் தலையணை உறை இருப்பு கணக்கை புத்தகங்களிலிருந்து பதிவழிக்கவும், செலவினமாக பதிவழித்துள்ள நுகர்வோர் பண்ட இருப்பை மீண்டும் இருப்புக் கணக்கிற்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கிறேன். | பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் குறித்த இருப்புக் கணக்கை செம்மையாக்க வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை ரூபா | சமர்பிக்காத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | கிடைக்க வேண்டிய 31 மீதிகளின் கூட்டுத் தொகை | 5,895,445 | மீதி உறுதிப்பாடு | கடன்படுனர்கறிற்கு மீண்டும் மீதி உறுதிப்பாட்டு அறிவித்தலை அனுப்ப | கிடைக்க வேண்டிய மீதிகளிற்கான உறுதிப்பாடுகளை பெற்றுக் கொள்ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுக்கிறேன். | மற்றும் அம் மீதிகளை அறவிடவும் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய 07 மீதிகளின் கூட்டுத்தொகை | 20,857,889 | மீதி உறுதிப்பாடு | மீண்டும் மீதி உறுதிப்பாட்டு அறிவித்தலை அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன். | செலுத்த வேண்டிய மீதிகளை உறுதிப்பாடுத்திக் கொள்ளவும் அம் மீதிகளை தீர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியன்று 04 கடன்படுனர்களிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்ட பாடநெறிக் கட்டணம் ரூபா 221,072 தொகை 2022 ஆண்டில் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 09 கடன்படுனர்களிடமிருந்து 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகளிற்கு இடையிலான காலமாக நிலுவையாகவுள்ள ரூபா 493,390 இனை அறவிட இயலாதிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை மற்றும் கட்டுப்பாட்டுக் சபையின் அங்கீகாரத்தின் கீழ் அறவிட முடியாத மீதிகள் பதிவழிக்கப்பட்டுள்ளன. ஓராண்டை விஞ்சிய கடன்படுனர் மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறவேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பற்றிற்கான தொடர்பபு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் | அரச முயற்சிகளின் பணத்தை நிலையான வைப்புக்களில் | நிறுவனத்தின் காணித் துண்டொன்றை இலங்கை இராணுப்படைக்கு | பணத்தை நிலையான வைப்புக்களில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 11 (ஆ) பிரிவு, 2004 ஜுன் 29 திகதிய இலக்கம் 25 கொண்டு அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2006 ஜுன் 27 திகதிய இலக்கம் PE/PE/9 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | முதலீடு செய்ய நிதியமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் குறித்த அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதும், நிறுவனத்தினால் வைப்புச் செய்த 2021 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 175,231,464 ஆன நிலையான வைப்பு முதலீடுகளிற்காக அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஒப்படைத்ததற்காக அரசினால் செலுத்திய ரூபா 155 மில்லியனான இழப்பீட்டுத் தொகை மற்றும் ரூபா 42 மில்லியன் தாமதக் கட்டணத்தை பயிற்சி வசதிகளை அபிவிருத்தி செய்யும் அங்கீகார கருத்திட்டத்திற்கு ஈடுபடுத்த திட்டமிட்டு பகுதிகளாக்கி இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. அமைச்சினூடாக பொது திறைசேரியை அறவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. | முதலீடு செய்ய நிதி அமைச்சிரின் இணக்கப்பாடு மற்றும் குறித்த அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி 371 | பெற்றுக் கொண்ட உப கட்டுநிதியை குறித்த நடவடிக்கை முடிவடைந்த உடனே தீர்க்க வேண்டிய போதும், 21 சந்தர்ப்பங்களில் அலுவலர்களுக்கு வழங்கியுள்ள ரூபா 532,760 ஆன உப கட்டுநிதியை தீர்க்க 34 நாட்கள் மற்றும் 268 நாட்களிற்கு இடையிலான காலம் கடந்திருந்தது. | கொவிட் தொற்று நிலைமையினுள் பெறும்பாளான முற்பணத்தை தீர்க்க தாமதமானது. தாமதத்தை தவிர்த்துக் கொள்ளதற்காக நடவடிக்கை எடுக்கிறேன். | உப கட்டுநிதியை குறித்த நடவடிக்கை முடிவடைந்த உடனே தீர்க்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,202,306 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 96,815,868 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 77,613,562 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் நிறுவனத்தின் மொத்த வருமானம் ரூபா 70,511,198 இனால் வீழ்ச்சியடைந்தமை, மொத்த செலவு ரூபா 7,102,363 இனால் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் மூலதன மானியம் ரூபா 8,250,000 இனால் மற்றும் பயிற்சி வருமானம் ரூபா 6,982,592 இனால் அதிகரித்திருந்த போதும் விடுதி வசதி வாடகை வருமானம் மற்றும் வட்டி வருமானம் முறையே ரூபா 4,080,585 இனால் மற்றும் ரூபா 3,985,061 இனால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் விஷேட அபிவிருத்தி கருத்திட்டங்களிற்கான அரச மானியம் ரூபா 80,817,397 தொகை கிடைக்காத காரணத்தால் மொத்த வருமானம் ரூபா 70,511,198 இனால் குறைவடைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் நடைமுறை சொத்து விகிதம் மற்றும் உடனடி சொத்து விகிதம் 7:1 ஆனதுடன் கடந்த ஆண்டில் அப் பெறுமானம் 10:1 ஆகவிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செயலாளரின் அறிவித்தலின் மீது 2017 ஆண்டில் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு கிடைத்துள்ள இலங்கை தேயிலை சபைக்கு சொந்தமான இரண்டு கெப் வண்டிகளை முறையாக சுவீகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காததுடன் அவ் வாகனங்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பிற்காக மீளாய்வாண்டு இறுதியிளவில் ரூபா 2,320,042 செலவிடப்பட்டிருந்தது. | இவ் விரண்டு கெப் வண்டிகளினதும் பதிவுரிமையை தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு சுவீகரித்துக் கொள்ள ரூபா 3.7 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியை இலங்கை தேயிலை சபைக்கு செலுத்த கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அத் தொகைகையை செலுத்தியதன் பின்னர் வாகனத்தின் பதிவுரிமையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | முறையாக வானங்களை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | விரிவுரை மண்டபம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அலகு உள்ளிட்ட புதிய கட்டிடத்தின் நிர்மாண செலவுகளை தீர்த்துக் கொள்ள மீளாய்வாண்டில் ரூபா 159,907,714 ஆன நிலையான வைப்பொன்றை பணமாக்கிக் கொண்டிருந்ததுடன் அதற்காக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளதாக அவதானிக்கபடவில்லை. | கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தின் மீது பட்டியல்களை செலுத்த பணம் வைப்புச் செய்துள்ளதால், அக் கொடுப்பனவிற்காக பணமாக்கும் சந்தர்ப்பத்தில் மீண்டும் கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் தேவையில்லை. | வைப்புப் பணத்தை மீள் பெற்றுக் கொள்ளும் போது கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாணடில் நிறுவனத்தின் மதிப்பீட்டு வருமானம் ரூபா 199,111,000 ஆன போதும், உள்ளவாறான வருமானம் ரூபா 139,830,000 ஆனதில் 30 சதவீத்தால் மதிப்பீட்டு வருமானத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் விடுதி வசதி வாடகை வருமானம் மற்றும் பயிற்சி வருமானம் முறையே 85 சதவீத்தால் மற்றும் 53 சதவீதத்தால் குறைந்தமை அதன்பால் பிரதானமாக தாக்கம் செலுத்தியிருந்தது. மேலும், 03 செலவினத் தலைப்புகளின் மதிப்பீட்டு செலவு ரூபா 48,163,000 ஆன போதும், உள்ளவாறான செலவு ரூபா 18,408,000 அல்லது 38 சதவீதம் ஆனதில் ரூபா 29,755,000 ஆன அல்லது 62 சதவீத முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் செலவின தலைப்புகளிற்கு இடையில் அம் முரண்கள் முறையே 53 சதவீதம், 77 சதவீதம் மற்றும் 92 சதவீதமானது. இதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தப்படாதமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் தொற்று நிலைமை காரணமாக மேற்கொள்ளவிருத்த நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டது. மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் பணமும் நிகழ்நிலை முறை காரணமாக குறைக்க வேண்டி ஏற்பட்டது. நிகழ்நிலை முறையூடாக பல பயிற்சி நெறிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அறவிடும் கட்டணம் குறைந்த பெறுமனத்தை எடுத்ததன் மீது பயிற்சி வருமானம் குறைவதற்கு தாக்கம் செலுத்தியுள்ளது. செலவின முரண்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | திறன் விருத்தி, கற்கை பாடநெறி, தொழிநுட்ப அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி போன்ற 26 வேலைத் திட்டங்களை 510 மாணவர்களின் பங்குபற்றலுடன் நடாத்தி ரூபா 48,530,000 ஆன வருமானத்தை ஈட்ட எதிர்பார்த்திருந்த போதும், | கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக திட்டமிட்டவாறு நிகழ்சித் திட்டங்கள் நடாத்தப்படாததுடன் நடாத்தப்பட்ட நிகழ்சித் திட்டங்கள் நிகழ்நிலை முறையின் கீழ் நடாத்தப்பட்டதால் கட்டணம் திருத்தப்பட்டது. கல்வி அமைச்சுடன் | திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் நிலைமைகளை முகாமை செய்து கொண்டு இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈட்டியிருந்த வருமானம் ரூபா 22,880,000 அல்லது எதிர்பார்த்த வருமானத்தில் 47 சதவீதமானது. திட்டமிட்ட 09 நிகழ்சித் திட்டங்களை நடாத்த முடியாது போனமை, 03 நிகழ்சித திட்டங்களிற்கு எதிர்பார்த்த மாணவர்கள் சமுகமளிக்காமையும், 02 நிகழ்சித் திட்டங்களிற்கு சமுகமளித்த மாணவர் எண்ணிக்கை அதிகரித்த போதும், ஒரு மாணவரிடமிருந்து அறவிட எதிர்பார்த்த கட்டணம் முறையே 32 சதவீதத்தால் மற்றும் 28 சதவீதத்தால் குறைத்து அறவிட்டமையும் அதற்கு காரணமாக இருந்தன. | இணைந்து 13 வருட தொடர் கல்வி வேலைத் திட்டத்தின் கீழ் 100 மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கு திட்டமிட்ட போதும் தெரிவு செய்யப்பட்ட 76 பேர்களிற்காக ரூபா 9,123,960 செலுத்த கல்வி அமைச்சு இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளது. | |
| (இ) | 130 மாணவர்களின் பங்குபற்றளுடன் ஆண்டினுள் நடாத்த திட்டமிட்டிருந்த 06 பாடநெறிகளை நடாத்தி இருக்காததால் அதன் மூலம் எதிர்பார்த்த வருமானம் ரூபா 41.58 மில்லியன் ஈட்டிக் கொள்ள மற்றும் எதிர்பார்த்த அறிவை சமூக மயப்படுத்த முடியாதிருந்தது. அதற்கு தாக்கம் செலுத்திய காரணம் தொடர்பாக கண்டறிந்து முறையான நடவடிக்கை எடுத்ததாக அவதானிக்கப்படவில்லை. | பட்டமளிக்கும் அதிகாரத்தை வழங்க ஒழுங்கமைக்கும் அதிகாரத்தை வழங்கும் நிறுவனமான கல்வி அமைச்சு, உயர் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கும் அனுமதியை இது வரை வழங்காததுடன் அது கிடைத்த பின்னர் நிறுவன சட்டத்தை திருத்தி பெறுத்தோட்ட பயிர் தொழிநுட்பம் மற்றும் முகாமைத்துவ விஞ்ஞான பட்டத்தை ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br>NVQ 05 தகைமையை பூர்த்தி செய்துள்ள அனைத்து மாணவர்களையும் பட்டதாரி பாடநெறியுடன் இணைந்து கொள்ள விருப்பம் தெரித்ததால், பெறுத்தோட்ட கருத்திட்ட முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (NVQ 06) ஆரம்பிக்கப்படவில்லை.<br>பெறுந்தோட்ட கணக்கீட்டு நிதி மற்றும் கிரய முகாமைத்துவ உயர் சான்றிதழ் பாடநெறியை நிகழ்நிலை முறையின் கீழ் | சாத்தியமான திட்டத்தை தயாரித்தல் மற்றும் ஏற்படும் நிலைமைகளை முகாமை செய்துகொண்டு நிகழிச்சித் திட்டங்களை நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பயிற்சி பெற கடினமாகையால் கொவிட் நிலைமையின் முன்னால் ஆரம்பிக்கப்படவில்லை. மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால் நுன்பாக நிதி முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி நிறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பெறுந்தோட்ட முகாமைத்துவ டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நடைமுறை தேயிலை பரிசோதனை பற்றிய தொழில் நிகழச்சித் திட்டத்திற்காக 10 மாணவர்களை பங்குபற்றச் செய்து 02 வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த திட்டமிட்டிருந்த போதும் விண்ணப்பதாரர்கள் முன்வராததால் அதனை நடாத்த முடியாதிருந்ததுடன் கடந்த 02 வருடங்களினுள்ளும் திட்டமிட்ட வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியிருக்கவில்லை. இது தொடர்பாக தாக்கம் செலுத்திய காரணிகள் தொடர்பாக கண்டறிந்து முறையான தீர்வு எடுத்ததாக அவதானிக்கப்படாததுடன் அதன் மூலம் ஈட்ட எதிர்பார்த்த வருமானத்தையும் திட்டமிட்டிருக்கவில்லை. | 2019 ஆண்டில் நிலவிய தீவிரவாத தாக்குதல் மற்றும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக இச் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த முடியாதிருந்தன. சமூக ஊடகங்களினூடாக பிரசாரமொன்றை வழங்கிய போதும் இதற்காக போதிய பங்குபற்றுனர்கள் அளவொன்று கிடைக்கவில்லை. | சாத்தியமான திட்டத்தை தயாரித்தல் மற்றும் ஏற்படும் நிலைமைகளை முகாமை செய்துகொண்டு நிகழிச்சித் திட்டங்களை நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியன்று நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட 70 பதவியணியினரில் உள்ளவாறான பதவியணியினர் 55 ஆனதுடன் 02 உயர் மட்ட பதவிகள், 02 மூன்றாம் மட்ட பதவிகள், 01 இரண்டாம் மட்ட பதவி மற்றும் 10 ஆரம்ப மட்ட | நிறுவனத்தில் அதிகளவான ஊழியர் பற்றாக்குறை காணப்பட்ட போதும், அரசாங்கள் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை காரணமாக ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பதவியணியினரை அதிகரிக்கும் நோக்கில் | நிறுவனத்தின் தேவைப்பாட்டின் மீது பதவி அளவுகளை திருத்திக் கொள்ள அல்லது காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| பதவிகள் என்றவாறு 2021 திசெம்பர் 31 திகதியற்று வெற்றிடமாகக் காணப்படும் 15 பதவிகளை தேவைக் கேட்ப பூர்த்தி செய்து கொள்ள அல்லது பதவி எண்ணிக்கையை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கோரப்பட்ட 24 பதவிகளில் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளிற்காக ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு 2021.02.18 திகதி முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |